# வலம்புரி

VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 09 திங்கட்கிழமை (22 · 05 · 2000) VALAMPURI ஒலி: 154


★ சாவகச்சேரிப் பகுதியில்

# இராணுவம்-புலிகள் நேரடி மோதல்

# ஆறுபேர் பலி! 42 பேர் காயம்

## விசேட ஊடக தகவல் நிலையம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப்பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேருக்குநேர் மோதல் இடம்பெற்றதாக இராணுவத் தரப்புச்செய்திகள் நேற்றுத்தெரிவித்தன

இம் மோதலின் போது படைத்தரப்பில் 6 பேர் கொல்லப்பட்டதாகவும், 6 அதிகாரிகள் உடபட 42 பேர் காயமடைந்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

சாவகச்சேரிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடி மோதல் இடம்பெற்றதாக யுத்த முனைச் செய்திகள் தெரிவித்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று தெரிவித்துள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்று வரும் நேரடி மோதல் தொடர்பாக விசேட ஊடகத்தகவல் நிலையம் தகவல் தருகையில் தற்பொழுதுமோதல் நேருக்கு நேர் நடைபெறுவதாகவும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப் பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 9.00 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5மணிக்குஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

★ இலங்கை வடபகுதி விவகாரத்தில்

# ஐ.நா.பாதுகாப்புச்சபை மத்தியஸ்தம் வகிக்க எடுத்த முயற்சி தோல்வி

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியில் யுத்தநிலைமை தொடர்பாகஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்று பிரேசில்தலைநகரில்இயங்கும் ஐரோப்பிய பாராளுமன்றம் தீர்மானம் நிறை வேற்றுவதற்கு எடுத்தமுயற்சிதோல்வி அடைந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் இருவர் இந்த முயற்சியை மேற்கொண்டிருந்தார்கள்:

பிரிட்டனில்கொன்சர்வேட்

(2ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறை மோதல் இருவர் பலி ஐவர் காயம்

[கொழும்பு]

கொழும்புத்துறையில் விடுதலைப்புலிகள் முன்னேறுவதற்கு மேற்கொண்ட முயற்சியினை பாதுகாப்புப்படையினர் முறியடித்துவிட்டதாக அறிவித்துள்ளனர்,

இராணுவத்தினருக்கு விமானப்படையினரும், பீரங்கிப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

★ கொழும்புத்துறைப் பகுதியில்

## ஊடுருவ புலிகள் முயற்சி இராணுவத்தினர் முறியடிப்பு

### படைவட்டாரங்கள் தகவல்

[கொழும்பு]

கொழும்புத்துறையில் நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை தொடுத்த வண்ணம் ஊடுருவ முயற்சிகள் மேற்கொண்டதாகவும் அம் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி விசேட ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

விசேட ஊடகத்துறை

[2. ஆம் பக்கம் பார்க்க]

★ ஒரு நாட்டின்

# உள் விவகாரங்களில் தலையிட எந்தஅமைப்பிற்கும் உரிமைஇல்லை

(கொழும்பு)

ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பாக தலையிடுவதற்கு எந்த ஒரு ஸ்தாபனத்திற்கும் உரிமை கிடையாது என பிரபல இராஜ தந்திரியும் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதி நிதியுமான பேராசிரியர் ஸ்ரான்லிகல்பகே வலியுறுத்தி கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தினால் தீர்வு காண்பதற்கு யுகோஸ்லாவியா பொஸ்னியா போன்ற பல விவகா

(2ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய கரையோரப் பகுதியில் நாசகாரி கப்பல் நடமாட்டம்

(சென்னை)

இந்திய நாசகாரி கப்பல் ஒன்றும் கடற்படைக் கப்பல் ஒன்றும் கடற்பிராந்தியத்தில் தயார் நிலையில் உள்ளதாக அந்நாட்டு அரச செய்திகள் தெரிவித்துள்ளன.

விசாகபட்டினத்திற்கும் பம்பாய்க் கரையோரத்திற்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சகல திணைக்கள தலைவர்களும் இன்று தவறாது சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதால் சகல திணைக்களத் தலைவர்களையும் தவறாது சமுகம் அளிக்குமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கேட்டுள்ளார். வடக்கு-கிழக்கு மாகாணசபையின் இணைப்பாளர் திரு. எஸ். செபநாயகம், கலால் திணைக்கள ஆணையாளர், வங்கி

(4ஆ பக்கம் பார்க்க

# பொதுத் தேர்தலை ஒத்திப்போடும் அவசியம் இன்னமும் ஏற்பட வில்லை!

## ஜனாதிபதி உறுதிபட தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலை எக்காரணம் கொண்டும் ஒத்தி வைக்கும் எண்ணம் தமக்குக் கிடையாதென்றும் அதற்கான அவசியம் எதுவும் ஏற்படவில்லையென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா உறுதி படத் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் அண்மையில் சுதந்திர மாணவர் சங்கத்தினருடனான சந்திப்பின் போது உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய அசம்பாவிதம் ஏதும் இடம்பெற்றால் ஒழிய பொ

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் யுத்த சூழலையடுத்து தமிழ்நாடு கடற்கரைப்பாதுகாப்பு தீவிரம்

(சென்னை)

இலங்கையில் தீவிரமடைந்து வரும் யுத்த சூழ் நிலையை அடுத்து தூத்துக்குடி மாவட்டம் உட்பட தமிழக கடற்கரையோரப் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு நேற்று தெரிவித்துள்ளது.

விமானம் மூலமாகவும் கப்பல் மூலமாகவும் கண்காணிப்பு

[2ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறி விட்டது

இல 145/14 நாவலர் வீதி நாவாந்துறையைச் சேர்ந்த த.காயத்திரி ஆகிய எனது விசேட அடையாள அட்டை(இல:-0901019370) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க.பத்திநாதன் மூத்த விநாயகர் கோவிலடி முதலாம் ஒழுங்கை ஆனைக்கோட்டை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

### திருட்டு

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப்பகுதியில் உள்ள வீடியோ ஒன்று உடைக்கப்பட்டு வீடியோ கசட்டுகள் திருடர்களலே எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (வ)

### கண்டெடுக்கப்பட்டது

சூட்கேஸ் ஒன்றும். திறப்புக் கோர்வை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டி பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

# எமது நாட்டிற்கு இன்று நிலையான தலைமை இல்லை

## சிங்கள உறுமய கட்சி தலைவர் தெரிவிப்பு

[கொழும்பு]

இன்று இந்த நாட்டிற்கு ஒரு நிலையான தலைமைத்துவம் இல்லை. ஐக்கியதேசியக்கட்சியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் சேர்ந்து நாட்டை காட்டிக்கொடுக்க பார்க்கின்றனர். என சிங்கள உறுமயக் கட்சியின் தலைவர் எஸ். எல். குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கையை பிரிக்கும் ஒரு கொள்கையை 'சிங்கள உறுமய' கட்சி ஒரு போதும் அனுமதிக்கப்போவது இல்லை

அரசும்ஐக்கியதேசியக்கட்சி சமாதானம் பேசுவதால் மட்டும் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டுவிடப் போவதில்லை பிரேமதாஸ காலத்திலும் கூடசமா தனம்பேசப்பட்டது ஆனால் கண்ட பலன் ஒன்றும் இல்லை.

இக்கட்சியின் பொதுச்செயலரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலக் கருணாரத்ன தமது உரையில்; இந்த நாட்டில் நூற்றிற்கு 7வீதம் வாழும் தமிழ் மக்களுக்கு விசேட சலுகைகள், நாட்டின் மூன்றிலொரு பகுதியை ஆட்சி புரியக்கூடிய அதிகாரம் வழங்கப்படுவதை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம் என்றார். (க)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் வலி. மேற்கிற்கு மாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்த நிலையை அடுத்து தென்மராட்சி மற்றும் யாழ்ப்பாணப் பகுதியில் இயங்கி வந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது இருப்பிடத்தை வலிகாமம் மேற்குப் பகுதிகளுக்கு மாற்றியுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமத்தைச் சேர்ந்த பொதுமக்களில் பெரும்பாலானோர் சங்கானை, வட்டுக்கோட்டை, மானிப்பாய் சண்டிலிப்பாய் போன்ற பகுதிகளுக்கு சென்றதையடுத்தே மேற்படி நிறுவனங்களும் இடம் மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [ந]

# நான்கு சிப்பாய்கள் இராணுவப்பொலிசிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு சிப்பாய்கள் இராணுவப்பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

டபிள்யு. ஐ. பெர்னாண்டோ கே.ஏ.எச்.எம்.ஞானசிறி, பி. ஏ அஜித்குமாரஎச். ஐ. சமன் பிரியந்த ஆகியோரேஇராணுவப்பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (க-12)

## இலங்கையின் தற்போதைய நிலை

# இந்தியாவிற்கு புதிய இராஜதந்திர சிக்கலை ஏற்படுத்தியுள்ளது

## அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிப்பு

(இலண்டன்)

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் தற்போது தோன்றி வருகின்ற புதிய மாற்றமானது இந்தியாவிற்கு ஒரு புதிய இராஜதந்திரச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தியா இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரையில் வெளியிலிருந்து வேடிக்கை பார்ப்பதைவிட ஆக்கபூர்வமான ஏதாவதொன்றை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியுள்ளது.

இல்லாவிட்டால் இந்தியா தென்னாசியப் பிராந்தியத்தில் புதிய ஒரு அச்சுறுத்தலை எதிர்நோக்க வேண்டிய நாள் வெகு தூரத்தில் இருக்க முடியாது என்றும் அரசியல் ஆய்வாளர்கள் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். [க-வ]

## உள்நோக்கம் கொண்ட

# சக்திகளின் பிடியிலிருந்து நாட்டை பாதுகாக்கத் தயங்கமாட்டேன்

## ஜெனரல் முஷாரப் சூளுரை

[இஸ்லாமபாத்]

உள்நோக்கம் கொண்ட சக்திகளின் பிடியிலிருந்து பாகிஸ்தானைப் பாதுகாக்கத் தயங்கப்போவதில்லை என இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

ராவல் பிண்டியில் பத்திரிகையாளர் மத்தியில் அண்மையில் உரையாற்றியஅவர் மேலும் தெரிவிக்கையில்,

பாகிஸ்தான் தன்மீது சுமத்திய நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் தான் நிச்சயம் நிறைவேற்றியே தீரப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

தேசம் அழிவிற்குப் போகும் நிலையை தான் காப்பாற்றியதாகவும், உயர் மட்டத்தில் நிலவிய ஊழல் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு விட்டதாகவும் நாட்டைச் சரியான பாதையில் இட்டுச் செல்லும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இராணுவமும் சிவில் நிர்வாகமும் பாகிஸ்தானிற்கான புதிய திட்டத்தை மிகவும் சிறப்பாக அமுல்நடத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார் [க]

### ஊடுருவ...

மேலும் தெரிவிக்கையில்;

இராணுவத்தினருக்கு உதவியாக இலங்கை விமானப் படையினரும் பீரங்கிப் படையினரும் கடும் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலின் போது ஏற்பட்டசேத விபரங்கள் குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (க-வ)

### கொழும்புத்துறை,..

படையினரும், உதவிவழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது

இம்மோதலின் போது இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஐந்துபேர் காயமடைந்துள்ளனர் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

### இலங்கையின்.:,

மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சந்தேகத்திற்கு இடமானோர் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் என்ற போர்வையில் இலங்கையிலிருந்து பலரும் தமிழகத்திற்குள் ஊடுருவும் வாய்ப்புகள் நிலவுவதையடுத்தே இவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டதாகவும் தமிழக அரச உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

### ஐ நா..

டிவ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் ஒருவரும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் நிலையான் உறுப்பினருமான நிரஞ்சன் தேவாதித்தியாவும் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது:

ஐரோப்பிய பாராளுமன்றத்தலைவர் இசல் றோசா, இத்தீர்மானம் கொண்டுவரப்படாமல் தடுத்துவிட்டரர்,

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு இறைமை, ஒற்றுமை, ஜன நாயகம், தேசிய ஐக்கியம் ஆகியவற்றைப்பாதுகாக்கக்கூடிய ஏனைய நான்கு தீர்மானங்களுக்கு அங்கீகாரம் வழங்கினார். [வ]

### தையல் மெஷின் திருட்டு

யாழ்ப்பாணம் சுவாட்ஸ் லேனில் உள்ள வீடொன்றை உடைத்து தையல் மெஷின் ஒன்றை திருடிச் சென்றுள்ளனர்.

### உள்...

ரங்கள் உள்ளன:

இலங்கை இன்று ஒரு குடியேற்ற நாடு அல்ல முன்கூட்டியே வேண்டுகோள் விடுக்காமல் இலங்கைப் பிரச்சினை பற்றி எவரும் விவாதிக்க முடியாது என்றார்.

இலங்கை விவகாரம் ஐக்கிய நாடுகள் சபைக்கு கொண்டு வரப்படும் முயற்சிகள் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விவகாரம் ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டாலும் ... ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தமது 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவிக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (க)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின்
சிரேஷ்ட இடைநிலைப் பிரிவுத் தலைவர்
அருட்திரு. ஜீவனதாஸ் (அ. ம. தி)
அடிகளாரின் அன்புத் தந்தையார்
அமரர்
**செல்வம் பெர்ணான்டோவின்**

மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காகவும் செபிக்கின்றோம்.

- ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி.

(கி-327)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
செல்வி சி. சிவறஞ்சினி அவர்களின்
அன்புத் தந்தையார்
**ஆறுமுகம் சின்னராசா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- விஞ்ஞான பீட மாணவர்கள்
3ஆம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

(கி-328)



## எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

## சிவா நறுமணப் பூங்கா

288. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி முகவரியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் அநேக வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு அமைய தற்காலிகமாக

**பொன்னையா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.**

என்ற முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருவதோடு, எம்மிடம்

★ பிஸ்கட் ★ டொபி
★ பேக்கறி உற்பத்திக்கு தேவையான பொருள்கள்
★ ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருள்கள்
★ பொலித்தீன் வகைகள்

இன்னும் பலவற்றையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகிறோம்.

குறிப்பு; ஆறுகால்மடத்திற்கு அடுத்த பஸ்தரிப்பு நிலைய தபால் கந்தோருக்கு அருகாமையில்.

(442)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முற் துறும்
- குறள்

# வலம்புரி

## இன்றெமை வாட்டும் இன்னல்கள் மாய்க

தீர்க்க தரிசனமாகக் குரல் எழுப்புபவர்கள் கவிஞர்கள். அன்று அவன் நாவில் தவழ்ந்த பெரு மூச்செறியும் வார்த்தைகள்தான் மேலே கூறப்பட்டவை. அவை அச்சொட்டா இன்று அல்லல் பட்டு ஆற்றாது அழுகின்ற ஈழத்தமிழர்களுக்கும் பொருந்தும். அவர்களின் நாவும் நாடி நரம்புகளும் தேடி நிற்பது இன்னல்கள் மாய வேண்டுமென்பதாகும்.

வேடிக்கை பார்க்கும் நேரம் இதுவல்ல. வீம்புக்காக வாழ்வை நகர்த்தும் காலமும் இதுவல்ல. உரிமை மறுப்பால் எரிமலைபோல் குமுறும் உள்ளங்களுக்கு ஒரு தீர்வு வேண்டும். உள்ளங்கை நெல்லிக்கனி போல இலக்கு இருக்க இழுத்தடிப்புச் செய்வது தர்மமாகாது. அரச இலக்கணமும் ஆகாது.

இன்றைய சூழ்நிலையில் மக்கள் சமுதாயத்தையணைத்துக் கொள்ள வேண்டியவர்கள் பலர். குறுகிய இலாப நோக்கு அறவே ஒழிய வேண்டும். தர்ம சிந்தனை, தாங்கிக் கொள்ளும் தகவு பரிணமிக்க வேண்டும்.

பசி என்பது பொல்லாதது தான். ஒரு நாள் உணவை ஒழிக்க முடியாத இடும்பை கூர் வயிற்றுடன் வாழ்வது அரிது. சாதாரண காலங்களிலும் அவலமுற்று பசிப்பிணியால் வாடியவர்கள் ஏராளம். அன்றியும் செயற்கை நிகழ்வால் பசிப்பிணியை அணைத்துக் கொள்பவர்கள் முழுமையாக உள்ள காலப் பிறழ்வு இன்று இந்த வேளைகளில் நாட்டுயர்வுக்காய் நாளும் உழைக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபம் கருதக் கூடாது. நட்டமேற்படினும் மக்களிடம் உரிமையோடு அதனை எதிர்காலத்தில் ஈடுசெய்யும் உரிமையோடு செயற்பட சிந்தை திரும்ப வேண்டும். இரு மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை சேமிக்க முழுமனதோடு முன்வர வேண்டும்.

வெட்ட வெளியும், விருட்ச நிழலும் கல்விக் கூடங்களும். ஆலய முன்றல்களும்வீடாகிப்போன காலம். சருகாகிப்போன காலத்தும் சந்தோஷம் காணமுடியாது சஞ்சலப் படுவோர் ஏராளம்.

பட்டகாலிலே படும் என்ற நிலையா தமிழனுக்கு இன்று. உள்ளத்தைச் சுட்டெரிக்கும் காலச் சூழ்நிலை மாற வேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்

## சமூகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்கள அலுவலர்கள்கூட்டுறவுஅபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரையும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கதலைமைக் காரியாலயத்திற்கு தவறாதுவருகைதரும்படி யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

(வ)

# யாழ். நகரிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள்பெருமளவில் மானிப்பாயில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொடரும் யுத்தத்தை அடுத்து யாழ்ப்பாணம், குருநகர், பாசையூர், போன்ற இடங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மானிப்பாய் நவாலி, கட்டுடைபோன்றஇடங்களில் சுமார் ஆயிரத்துநூறு பேர் வரையில் தங்கியுள்ளனர்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் 248 பேரும், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயத்தில் 72 பேரும், மானிப்பாய் இந்துக்கல்லூரியில் 350 பேரும், மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரியில் 150 பேரும், நவாலி அட்டகிரி வித்தியாலயத்தில் 142 பேரும், கட்டுடை சைவவித்தியாசாலையில் 160 பேரும் சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலையில் 40 பேரும் தங்கியுள்ளனர்.

இப்பாடசாலைகளில் இடம் பெயர்ந்தோர் பெரும் உணவுப் பற்றாக்குறையை எதிர் நோக்குவதாகவும் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் தங்கியுள்ளவர்களுக்கு நேற்று மதிய உணவு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

[க-வ]

## இலங்கைத் தமிழரை பாதுகாப்பது மத்திய,மாநில அரசுகளின் கடமை

### தமிழக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

யாழ்ப்பாணத்தில் தொடரும் யுத்தக் கெடுபிடியில் சிக்கியிருக்கும் இலங்கைத்தமிழரை பாதுகாக்கவேண்டியது மத்திய மாநில அரசுகளின் கடமையாகும்என தமிழகசட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவர்கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் வழியாக தமிழ் அகதிகள் இந்தியாவிற்கு வருவது தடுக்கப்பட்டதையடுத்து இலங்கைத் தமிழ் அகதிகள் பெரும் இன்னலிற்குள் சிக்கியுள்ளதாகவும் அகப்பட்ட இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## கொழும்பில் கண் நோய் வேகமாகப் பரவுகிறது

(கொழும்பு)

கொழும்பில் கண் நோய் வேகமாகப் பரவி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கண் சிவப்பதன் காரணமாக சிகிச்சை பெறும் பொருட்டு பெருமளவினரான நோயாளர் கொழும்பு வைத்தியசாலைக்கு வருவதாக கொழும்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு வைத்தியசாலைக்கு வரும் கண் நோயாளர்களின் தொகை தினமும் அதிகரித்து வருவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் சரத்அபயசிங்கா தெரிவித்துள்ளார்.

வைரஸ் மூலம் பரவும் இக் கண்நோய் இயல்பாக மாறி விடும் என்றும் பார்வைக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்றும் தேவையற்ற மருந்துகளைப் பயன்படுத்தாமல் கண் வைத்தியரிடம் காட்டி தகுந்த சிகிச்சை பெறுவது சிறந்தது என்றும் இந் நோய்வந்தால் வீட்டில் இருப்பதே சிறந்தது என்றும் ஐந்து தினங்களுக்குள் நோய் குறைந்து விடும் என்றும் சரத் அபயசிங்கா கூறியுள்ளார்.

(வ)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

[வவுனியா]

தொடரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு

- ● ராகுலன் (சுரேஸ் கேதீஸ்வரன்) மட்டக்களப்பு
- ● முகுந்தினி [சனஞ்சயநாதன். உமா] வவுனியா
- ● திருவுளன் / அபிநயன் [துரைசிங்கம் கேசவன்]யாழ்ப்பாணம்
- ● சுதாகரன்- (மகாதேவன் ரஞ்சித்)யாழ்ப்பாணம்
- ● அழகன் [தம்பியப்பா யோகஸ்வரன் மட்டக்களப்பு
- ● சோலையப்பன் [செல்வரெட்ணம் கலிங்கரன் மட்டக்களப்பு
- ● தற்போதியன் [தேவராஜா தேவகுமார்] மட்டக்களப்பு

சிறப்பு எல்லைப்படை வீரரான

- ★ சின்னத்துரை மணிவண்ணன்/ ரசீவ் யாழ்ப்பாணம்
- ★ செல்வநாயகம் குணதீஸ்வரன் பூநகரி
- ● எழில் (சூரியகுமாரன் தேவரூபினி) கிளிநொச்சி
- ● ஓவிகா / கயல்விழி (ஜெயரட்ணம் நர்மதா) யாழ்ப்பாணம்
- ● செழியமுதன் [செல்வராசா யோகேஸ்வரன்] யாழ்ப்பாணம்
- ● தணிகை (ஆனந்தராசா ஜெயகௌரி) முள்ளியவளை
- ● றஜீவன் (பாலசிங்கம் ஜெகதீஸ்வரன்] பூநகரி
- ● புரட்சி [இராசரட்ணம் திலீபன்] யாழ்ப்பாணம்
- ● வெற்றி / அங்கையன் (பசுபதி பிரபாகரன்] யாழ்ப்பாணம்
- ● தீபராஜ் [கணபதிப்பிள்ளை விஜயராஜ் மட்டக்களப்பு
- ● முரளி [இராசரட்ணம் அன்ரன் கிறாஸ் திலீபன்]
- ● இராசரட்ணம் இசைப்பிரியன் முல்லைத்தீவு
- ★ பெரியசாமி (ஆறுமுகம் தம்பிராசா) விசுவமடு
- ★ ராஜா [சண்முகம்சிவறஞ்சன்) கண்டி
- ★ சின்னத்துரை கோமுகன் ஆகியோராவர்

[ந-7]

## காங்கேசன், பலாலி சேவைகள் வழமைபோல் இடம் பெறுகின்றன

பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறை முகப்பகுதியில் வழமைபோல் செயற்பாடுகள் இடம் பெற்று வருவதாகஇராணுவத் தரப்பு நேற்று தெரிவித்தது.

மேற்படி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட் தாக்குதல்களினால் பாதிப்பு எதுவும் குறிப்பிடக் கூடியளவிற்கு ஏற்படவில்லை எனவும் இராணுவத் தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

அத்தியாவசியப்பொருட்கள் உட்பட பொது மக்களிற்குத் தேவையான இதர சேவைகளும் இப்பகுதியூடாக வழமைபோல் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க-வ]

# சிவலிங்கப்புளியடிபாலம் மண் அகற்றுவதுஎப்போ

சிவலிங்கப்புளியடிச் சந்தி - கே. கே. எஸ். வீதியில் கட்டப்பட்ட பாலத்தின் வெளி வேலைகள் பூரணப்படுத்தப்படாமையினால் இவ் வீதியினால் செல்லும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதிக்குக் குறுக்கே மண் குவியல் கிடப்பதால் வாகனப் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

யாழ். நகரிலிருந்து வலி மேற்குப் பகுதிக்கு இடம் பெயர்ந்து இவ் வீதியால் சென்ற மக்கள் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ் வீதிப் பகுதி நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டதால், மண் அகற்றுவதற்கு ஊரடங்கு தடையாக இருக்க முடியாதெனவும் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

(ந)

## யாழ்.குடாநாட்டிற்கு சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படுகிறது

### சபை வட்டாரங்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிற்கு சுன்னாகம் மின் இணைப்பு நிலையத்திலிருந்து மட்டுமே மின்விநியோகம் நான்கு கட்டங்களாக ஒவ்வொரு மணித்தியாலம்வரை நடைபெற்று வருவதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தினமும் காலை5.30-6.30 மணிவரை வட்டுக்கோட்டை பகுதிக்கும் 6.30-7 30மணிவரை தென்மராட்சி, வடமராட்சிப்பகுதிகளுக்கும், 7.30 -8.30 மணிவரை காங்கேசன் துறை கொக்குவில், கோண்டாவில், தாவடி, கோம்பயன் மணல், இணுவில் பகுதிகள் 8.30-9.30 வரை யாழ்ப்பாணப் பகுதிகளுக்கும் மின் விநியோகம் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

[வ]

## குண்டுவெடிப்பு

பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமபாத்திற்கு அருகே ராவல்பிண்டி நகரத்தில் அமைந்துள்ள சந்தையில் குண்டொன்று வெடித்துள்ளது. இதில்ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார்அறிவித்துள்ளனர்.வ-07

## பொருட்களை எடுக்கவும்

தனியார் வர்த்தகர்கள் தமக்குச் சொந்தமான பொருட்களை கோண்டாவில் களஞ்சியத்தில் இருந்து உடனடியாக எடுத்துக் கொள்ளுமாறு யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

[வ]

★ மேற்கு திரிபுராவில்

# ஆயுதபாணிகள் வெறியாட்டம் 25 பேர் பலி! 10 பேர் காயம்;

(புதுடில்லி)

மேற்கு திரிபுராவில் கிராமப்பகுதி ஒன்றில் தடைசெய்யப்பட்ட தேசிய முன்னணியினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 25 பேர் துடிதுடித்துப்பலியாகினர் 10பேர் காயமடைந்தனர்.

இத் தாக்குதலையடுத்து இப் பகுதியில் பதற்ற நிலை நீடிப்பதாகவும் பொலிஸாரும் இராணுவத்தினரும் தீவிர பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதையடுத்து வீதியில் மக்கள் நடமாட்டம் எதுவும் இன்றி வெறிச்சோடிக் காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

தீவிரவாதிகள் கைக்குண்டிகளை வீசியும் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாகவும் பி.ரி.ஐ. செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

(க-12)

## ஷெல்வீழ்ந்துகட்டடம்சேதம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கமநலச்சேவை நிலையத்தின் புதிய கட்டடத்தின் மீது ஷெல் விழுந்ததினால் அக்கட்டடம் பாரிய சேதத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டடத்தில்மண்வெட்டிகள்: கிருமிநாசினி மற்றும் விவசாயப் பொருட்கள் இக்கட்டடத்தில் களஞ்சியப்பட்டிருந்ததாக கமநலச்சேவை வட்டாரங்கள் தெரிவித்தன (வ)

## மட்டக்களப்பு துப்பாக்கிசூட்டு சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் பலி இருவர்காயம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருவேறு இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் ஒருபொலிஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்டார்இருவர்காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினமும் நேற்றும் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் காத்தான் குடியைச்சேர்ந்த பொலிஸ்கான்ஸ்டபிள் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,(07-க)

## சாவகச்சேரி யுத்த களத்தில் காயமடைந்த பொதுமக்கள்

[புலோலி]

சாவகச்சேரிப் பகுதிகளில் பரவலாக வீழ்ந்து வெடித்த ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து மந்திகை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் மேலும் ஒரு பகுதியினரின் பெயர் விபரங்கள் வருமாறு.

சானையன் பொன்னையா [வயது66]மட்டுவில், சரவணமுத்து சின்னத்தங்கம் [வயது 31] மட்டுவில், இளையவன் வைத்தி[வயது66] மட்டுவில், வல்லிபுரம் வதனி [வயது11 அல்லாரை, பொன்னம்பலம் விஜயா(வயது45)அல்லாரை, நடராஜா, மகேஸ்வரி[வயது 68], மீசாலை, க.வல்லிபுரம் [வயது 55],மீசாலைவடக்கு, வி. ஆறுமுகம் [வயது 73] சங்கத்தானை, ரவீந்திரன் கமலேஸ்வரி [வயது39]மட்டுவில் தெற்கு, வல்லிக்குட்டி உதயசூரியன் [ வயது31 ] மந்துவில்மேற்கு, நவரெட்ணம் வினோதனம் [17மாத குழந்தை],

நாகமுத்து பூமணி [வயது 55] சரசாலை, கனகரத்தினம் மகேஸ்வரி [வயது 54] சரசாலை, எம். நவரெத்தினம் [வயது 44] மந்துவில், நாகமுத்து சிவரெத்தினம் [வயது 40] சரசாலை.

வை, வசந்தாதேவி [வயது 31] சரசாலை தெற்கு, அரசரெத்தினம் பிறேமரூபன் [வயது 19] மீசாலை, குலசேகரம் நவரெத்தினம் [வயது 50] மீசாலை, கனகரத்தினம் மயூரன் [வயது 16] சரசாலை சுந்தரலிங்கம் தயாநந்தன் [வயது 23] மட்டுவில்.

## இலங்கை விவகாரத்தில் தீர்வுகாண இந்தியாவின் பங்கு அவசியம்

### இல- தமிழ்க் கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா நேரடியாக முயற்சிக்க வேண்டும் என்றும் வெறுமனே மனிதாபிமான உதவிகள் என்ற வரையறைக்குள் மட்டுப்படுத்தக் கூடாது என்றும் இலங்கைத் தமிழ் அரசியல்க் கட்சிகள் இந்திய மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாக 'ராய்டர்' செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாகபுளொட் முக்கியஸ்தர் தர்மலிங்கம் சிந்தார்த்தன் ராய்டருக்குத் தெரிவிக்கையில்,

இந்த விவகாரத்தில் இந்தியா பாரிய பங்களிப்பை நல்க வேண்டுமெனவும் இலங்கைவாழ் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையிலான அரசியல்த் தீர்வின் அடிப்படையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்றை இந்திய மத்திய அரசாங்கம் வகுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக அரசியல் கட்சிகள் பல கருத்து வெளியிடுகையில்,

யுத்தத்திற்கு முடிவு கண்டு பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய தருணம் வந்து விட்டதென்று தெரிவித்துள்ளன. (க-வ)

---

சகல-..

முகாமையாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், மீன்பிடிக் கூட்டுத்தாபன அதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி,கிராம அபிருத்தி அதிகாரி உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கட்டடத்திணைக்கள அதிகாரிகள், இலங்கை மின்சாரசபை பொதுமுகாமையாளர் பனை அபிவிருத்திச் சபை, வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொதுமுகாமையாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபன பொதுமுகாமையாளர், ரெலிகொம் நிறுவன பிரதம பொறியியலாளர், சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோருடன்,

கரவெட்டி, பருத்தித்துறை, வேலணை, கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய்பிரதேச செயலர்களையும் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். [வ]

---

இந்திய...

இடையில் இக் கப்பல்களின் நடமாட்டம் காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் நடைபெற்று வரும் வேகமாறுதல்களை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது என அந்நாட்டுப் பிரதமர் அண்மையில் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (-மவ)

## நோர்வேபிரமுகர்கள் இன்று இலங்கைக்கு விஜயம் செய்வர்

### தூதரகம் தெரிவிப்பு

[கொழும்பு]

இலங்கையின் வடபகுதியில் மாறிவரும் நிலைமைமற்றும் இனப்பிரச்சினை விவகாரம் குறித்து விரிவான முறையில் இலங்கை முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்துமுகமாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் றேமண்ட் ஜொகான்சன் மற்றும் இலங்கைக்கான நோர்வே சமரசப் பேச்சாளர் எரிக் ஹெலேம் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர்.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்ததுடன் இவர்கள் இருவரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சு நடத்தவுள்ளதாக நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது. (க-வ]

## இந்த மண்ணில் நடக்கும் அவலம் முடிவிற்கு வரப்படவேண்டும்

### ஐ. நா- செயலருக்கு அவசர கடிதம்

யாழ்ப்பாணத்தில் தொடரும் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென யாழ். வெகுஜன அமைப்பு ஒன்றியம் ஐ. நா. செயலர் கோபி அனானிர்கும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கும் அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அவ் அவசரகடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது மனித உயிர்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதில் தங்களுக்கு ஐந்தவித கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.

இந்த மண்ணில் இடம்பெறும் அழிவுகளை நிறுத்தி மனிதபிமான அடிப்படையில் தாங்கள் உதவ முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

ஐக்கிய நாடுகள் சபையில் பூரண விசுவாசம் கொண்டவர்கள் என்ற வகையில் மனிதாபிமான அடிப்படையில் இந்த வேண்டுகோளை விடுப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, [க]

## சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்ட கூட்டுறவுச் சபைப் பணியாளர்கள், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிபணியாளர்கள், சபைக் காரியாலயத்திற்கும்,அச்சகப்பணியாளர்கள்காலை 9.00 மணிக்கு இன்று அச்சகத்திற்கும் சமூகமளிக்குமாறு மாவட்டச் செயலாளர் சு. சிவசுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [வ]

---

பொதுத் தேர்தல்...

துத்தேர்தல் உரிய நேரத்தில் நடாத்தப்படும்.

எத்தகைய பாரிய அசம்பாவிதங்கள் ஏற்படுவதனை நாம் விரும்பவில்லை என்றார்.

நாட்டின் சகல பல்கலைக் கழகங்களைச்சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் பலர் இம் மாணவர் சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

---

இராணுவம்...

இம்மோதலில் படைத்தரப்பில் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும், ஆறு அதிகாரிகள் உட்பட 42 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரடி மோதலின் போது, இராணுவத்தினர் பீரங்கிகள், மற்றும் கனரக ஆயுதங்களைக் கொண்டு கடும் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்மோதலின் போதுபுலிகளின்தரப்பில்பெருமளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது: (க-வ)

## களஞ்சியத்திற்கு இன்று காலை வரவும்

யாழ். மாவட்டத்தில்உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் இன்று முதல்தமக்குத் தேவையான (இரண்டு மாதங்களுக்கு அரிசி, சீனி போன்ற உணவுப் பொருட்கள் புனர்வாழ்வுக் களஞ்சியத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

புனர்வாழ்வுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருட்களை கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுக்கொள்வதற்காக இன்று கோண்டாவிலில் உள்ள களஞ்சியத்திற்கு தத்தம் லொறிகளுடன் வருகைதருமாறு திட்டப்பணிப்பாளர் மேலும்கேட்டுள்ளார்.


## இடம்மாற்ற அறிவித்தல்

221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

**"மதுரா மாளிகை"**

(கால் நடைத் தீன் வாணிபம்)

இன்று (22-05-2000) முதல்

**பாலன் மில், மாவடிச் சந்தியில்**

தற்காலிகமாக இயங்கும் என்பதை வர்த்தகர்களுக்கும் பண்ணையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**மதுரா மாளிகை**

221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(443)

## எரிக்கணேஸ்

**பார்மசி & மூக்கு கண்ணாடியகம்**

தற்போது கீழ்க்காணும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொன்னையா லேன்,
(போஸ்ரொபிஸ் லேன்)
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (கி-329)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் நல்லம்மா

துர்க்காபுரம் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவி நல்லம்மா 17-05-2000 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் கமலாம்பிகை, தவமணி, சந்திரமதி, சந்திரவதனா, கமலேஸ்வரி, மல்லிகாதேவி, சந்திரகுமாரன், வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகரத்தினம், செல்வராசா, நாகராசா, தனேந்திரராசா,சண்முகதாஸ், கேசவமூர்த்தி, பேபி, ராஜரட்ணம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 21 - 05 - 2000 அன்று கொழும்பில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்:
ந. சண்முகதாஸ்

''தாஸ் ஸ்ரோஸ்''
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(இ-330)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 22-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.